# OFFICE OF THE CHIEF ELECTORAL OFFICER
Villianur Main Road, Lawsthottam, Reddiarpalayam, Puducherry-605 010
Phone: (0413) 2292204, 2292205 Fax: (0413) 2292206
Web: http://ceopuducherry.py.gov.in Email: ceo_pondicherry@eci.gov.in

No.E.4(1)/2019 - 392 புதுச்சேரி, தேதி: 27 FEB 2019

## ஆணை

பொருள்: தேர்தல் - புதுச்சேரி நாடாளுமன்ற தேர்தல் 2019–குழுக்கள் அமைத்தல் - தொடர்பாக.

****

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 15.4.2004 தேதியிடப்பெற்ற ஆணை எண்.509/75/2004/JS.1ல் கண்டுள்ள நெறிகாட்டுதலின் தொடர்ச்சியாக அதனுடன் இணைத்துப்பார்க்க வேண்டிய 21.11.2008, 8.6.2010, 23.9.2010, 18.3.2011, 16.8.2011, 27.8.2012, 8.11.2013, 15.3.2014, 11.4.2014, 12.4.2014, 14.4.2014 மற்றும் 25.2.2019 தேதியிட்ட அறிவுறுத்தல்கள்/வழிகாட்டுதல்கள் அடிப்படையில் கீழ்காணும் குழுக்கள் உடனடியாக அமைக்கப்படுகின்றன:-

*1. மாவட்ட நிலை ஊடகங்கள் சான்றிடுதல் மற்றும் கண்காணிப்புக் குழு (DL-MCMC)*

(அ) DL-MCMC-ன் அமைப்பு, DL-MCMC கீழ்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்:-

| | | |
|---|---|---|
| அ. | மாவட்ட தேர்தல் அதிகாரி, புதுச்சேரி / காரைக்கால் | தலைவர் |
| ஆ. | உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி (SDM நிலைக்கு கீழ் இல்லாமல் - மாவட்ட தேர்தல் அதிகாரிக்கு இணையாக) | உறுப்பினர் |
| இ. | மாவட்ட தேர்தல் அதிகாரியால் தேர்ந்தெடுக்கப்பட்ட இடைத்தரக நிபுணர் / சமூக ஊடக நிபுணர் | உறுப்பினர் |
| ஈ. | செய்தி ஆசிரியர், அகில இந்திய வானொலி | உறுப்பினர் |
| உ. | தற்சார்பு குடிமகன் / பத்திரிக்கையாளர்(PCI பரிந்துரைப்படி)* | உறுப்பினர் |
| ஊ | உதவி இயக்குநர், செய்தி மற்றும் விளம்பரத் துறை | உறுப்பினர் செயலர் |
| * | இடைத்தரக நிபுணர் / சமூக ஊடக நிபுணர் ஒரு அரசாங்க அதிகாரியாக SDM நிலைக்கு கீழ் இல்லாமல் குறைந்தபட்சம் 5 வருட காலம் அரசாங்கத்தின் தகவல் தொழில்நுட்ப துறை / cell / சமூக ஊடக cell போன்றவற்றில் வேலை செய்த அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அரசாங்கத்தில் வேலை செய்த அனுபவம் இல்லாதவராய் இருந்தால் அவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் முதுநிலை பட்டம் பெற்றவராயும் 10 வருடங்கள் அரசாங்கத்தின் தகவல் தொழில்நுட்ப துறை / cell / சமூக ஊடக cell போன்றவற்றில் வேலை செய்த அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். மேலும் சமூக ஊடக தளங்களில் நல்ல புரிதல் மற்றும் அவர்கள் எப்படி வேலை செய்கிறார்கள் மற்றும் பின்னணி மற்றும் நடுநிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் தகுதியுடையவர்களாக இருக்க வேண்டும். | |
| ** | *PCI எவரையும் பரிந்துரைக்கவில்லை என்றால், மாவட்ட தேர்தல் அதிகாரி விருப்பமுள்ள தற்சார்பு மூத்த குடிமகனையோ அல்லது நன்மதிப்புப் பெற்ற பத்திரிக்கையாளரையோ நியமிக்கலாம். இவர் மாவட்ட தேர்தல் அதிகாரியின் நோக்கில் அவரின் பின்புலம், நடுநிலைமைத் தன்மையில் தகுதியுடையவராக இருக்க வேண்டும்* | |

ஆ. DL-MCMC-யின் பணிகள்:DL-MCMC இரண்டு தனித்தனி பணிகளை பெற்றிருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| (i) | விளம்பரங்களை சான்றிடுதல்: | | உச்சநீதி மன்றத்தின் ஆணைக்கு ஏற்ப விளம்பரங்களை சான்றிடுவதற்காக DL-MCMC-யின் உறுப்பினர்கள் (1) மற்றும் (2) விண்ணபங்களை தொலைக்காட்சி, கேபிள் தொலைத் தொடர்பு (cable networks)-இவற்றில் விளம்பரங்களை சான்றிடுதலுக்காக மாவட்ட அளவில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடமிருந்து மட்டும் விண்ணபங்களை வரவேற்கும். |
| (ii) | புகார்களை விசாரித்தல் / கட்டணச் செய்திகள் பிரச்சனைகள்: | | இதற்காக DL-MCMC-ன் அனைத்து உறுப்பினர்களும் கண்காணிப்பு ஏற்பாடு மூலம் புகார்களையும் மற்றும் கட்டணச் செய்திகள் மற்றும் சமூக வலைதளங்கள் தொடர்பான பிரச்சினைகளையும் விசாரிக்கும். |

இ. DL-MCMCயின் அதிகாரங்கள்:

(i)விளம்பரங்களைச் சான்றிடுதல்: மாவட்ட தேர்தல் அதிகாரி மற்றும் (செஷன்ஸ் மாவட்ட நீதிபதி நிலைக்கு கீழ் இல்லாத) உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி,

(அ) விளம்பரத்தின் எந்த ஒரு பகுதியையும் நீக்க / திருத்தி அமைக்க அதிகாரம் பெற்றவர்கள். மேலும் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சி அல்லது போட்டியிடும் வேட்பாளர் அல்லது மற்ற எந்த நபரும் இவ்வாறான தகவலைப் பெற்ற 24 மணி நேரத்திற்குள் உத்தரவிற்கு பணிய வேண்டும். இவ்வாறு மாற்றம் பெற்ற விளம்பரம் மறுபரிசீலனைக்கும், சான்றிடுதலுக்காகவும் மீண்டும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஆ) விளம்பரம் சட்டத்தின் தேவைகளுக்கு உட்பட்டிருந்தால் மற்றும் உச்சநீதி மன்றத்தின் 02-04-2004 மற்றும் 13-04-2004 நாளிட்ட ஆணையில் காணப்பெறும் உத்தரவுகளின்படி இருந்தால் இணைப்பு-ஆ-வில் குறிப்பிட்டப்படி சான்றிதழ் வழங்கும்

(இ) பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களின் பதிவினை பராமரிக்கலாம். ஓவ்வொரு விண்ணப்பத்திற்க்கும் வரிசை எண் வழங்க வேண்டும். இந்த வரிசை எண் மின்னணு வடிவத்தில் இரண்டு நகல்களில் குறிப்பிடப்பட வேண்டும். மின்னணு நகலில் உரிய அதிகாரி கையொப்பமிட வேண்டும்.இவ்வாறு அனுமதி பெற்ற விளம்பரத்தின் பிரதி ஒன்றை குழு வைத்துக்கொள்ளும்.

(ஈ) அனுமதியின் பிரதியை அனைத்து செலவினங்கள் விபரங்களுடன் இதற்காக அமைக்கப்பட்ட கணக்கு வைப்பு (Accounting) குழுவிற்கு அனுப்பி வைக்கவேண்டும்.

**(ii)** புகார்கள் / கட்டணச் செய்திகள் பிரச்சனைகளை விசாரித்தல்: DL-MCMC-யின் அனைத்து உறுப்பினர்களும் அனைத்து ஊடகங்களையும் (எ.கா. தினசரி செய்தித் தாள்கள், அச்சு மற்றும் மின் ஊடகங்கள், கேபிள் தொலைக்காட்சிகள், இணையதளம், அலைபேசி தொடர்புகள் போன்றவை) இவற்றை கீழ்கண்டவற்றிற்காக சோதிக்கும்:-

அ. கட்டணச் செய்திகள் என சந்தேகிக்கப்படுபவை;

ஆ. செலவினங்கள் பார்வையாளர்களால் குறிப்பிடப்படும் கட்டணச் செய்திகள் எனக் கருதப்படும் செயல்பாடு.

இ. வெளியிடப்பட்ட செய்திகள் அல்லது கருத்தில் கொள்ளப்படும் (notional) செலவினங்களை DIPR கட்டண அடிப்படையில் அல்லது DIPR கட்டணங்கள் இல்லாதபட்சத்தில் DAVP கட்டணங்கள் அடிப்படையில், இவற்றின் உண்மையான செலவினங்களை சேர்ப்பதற்கு வேட்பாளருக்கு அறிவிப்புக் கடிதம் அனுப்புதல் பற்றி தேர்தல் நடத்தும் அதிகாரிக்கு தெரியப்படுத்துதல்.

ஈ. அனுப்பப்படும் அறிவிப்புக் கடிதத்தின் நகலை செலவினங்கள் பார்வையாளருக்கு அனுப்புதல்.

உ. மின் ஊடகங்களில் வரும் அரசியல் விளம்பரங்களின் தொலைக்காட்சி ஒளிபரப்பு/ஒலிபரப்பு சான்றிட்டதற்கு பின்தான் செய்யப்பட்டதா என்பதை கண்காணித்தல்

ஊ. பொது விளம்பரங்கள் அல்லது விளம்பரங்கள் அல்லது வேட்பாளரால் அல்லது வேட்பாளர் சார்பாக சிறப்புப் பேச்சாளரால் அல்லது மற்றவர்களால் செய்யப்படுபவைகளில் உள்ள அரசியல் விளம்பரங்கள், வேட்பாளரின் தேர்தல் வாய்ப்பில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றதா என்பதை கண்காணித்தல். மற்ற ஊடகங்களில் வேட்பாளர்கள் தொடர்புடைய நேரடி அல்லது மறைமுக செலவினங்களை கண்காணித்தல் நோக்கில் பார்த்தல்,

எ. அச்சு ஊடகங்களில் வரும் விளம்பரங்கள் வேட்பாளரின் இசைவைப் பெற்றதா அல்லது அவருடைய கவனத்திற்கு உட்பட்டு வந்ததா என்பதை சோதித்தல், விளம்பரம் வேட்பாளரின் அனுமதி பெறவில்லை என்றால் இந்திய தண்டனைச் சட்டம் 171H ன்படி வெளியீட்டாளர் மீது சட்ட சடவடிக்கை எடுத்தல்.

ஏ. எந்த ஒரு தேர்தல் துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள், கைச்சீட்டுகள் மற்ற ஆவணங்களில் மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1951 பிரிவு 127A-யில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல வெளியீட்டாளர் மற்றும் அச்சிடுபவரின் பெயர், முகவரி உள்ளதா என்பதை சோதிக்க வேண்டும். எந்த அச்சிடப்பட்டவையின் முகப்பில் வெளியீட்டாளர் அல்லது அச்சிட்டவரின் பெயர் மற்றம் முகவரி குறிப்பிடப்படவில்லை என்றால் அது தேர்தல் நடத்தும் அதிகாரியின் கவனத்திற்கு தேவையான மேல் நடவடிக்கைக்காக கொண்டு செல்லப்பட வேண்டும். மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951 பிரிவு 127A-யின் தேவைக்காக கட்டணச் செய்திகளும் மற்ற வகை ஆவணங்களுடன் சேர்க்கப்படுகின்றது.

ஐ. DL-MCMC கணக்கு வைப்பு குழுவிற்கு (Accounting team) தினமும் அறிக்கை அளிக்க வேண்டும். அதன் பிரதி ஒவ்வொரு வேட்பாளர் தொடர்பாக தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் செலவினங்கள் பார்வையாளருக்கு அனுப்பப்பட வேண்டும். “செய்திகள்” வெளியிடுவதற்கு ஆகும் செலவினங்கள், செலவினங்கள் வழிகாட்டலின் (expenditure guidelines) இணைப்பு 12-ல் தரப்பட வேண்டும். மேலும், வேட்பாளரால் தரப்படும் தேவையான ஆவணங்கள் அல்லது மதிப்பீடு செய்யப்பட்ட கட்டணச் செய்திகள் விஷயங்களில் DL-MCMC-ஆல் கணக்கிடப்பட்ட நோக்கச் செலவினங்கள் (notional expenditure) சேர்த்தளிக்கப்பட வேண்டும்.

ஒ. ஊடகங்களை கண்காணிக்க DL-MCMC பொருத்தமான செயல்பாடுகளை ஏற்படுத்தலாம். மேலும் போதுமான ஆட்களையும், உள்ளமைப்பையும் அமைத்துக் கொள்ளலாம்.

(iii) விளம்பரங்களை சான்றிட விண்ணப்பிக்கும் முறை:யூனியன் பிரதேசத்தில் தலைமையகம், பதிவு அலுவலகம் உள்ள அனைத்து அரசியல் கட்சிகள், மற்ற கழகங்கள் அல்லது குழுமங்கள் அல்லது குழுக்கள் அல்லது நிறுவனங்கள் மற்றும் போட்டியிடும் வேட்பாளர்கள் இணைப்பு-அ-ல் கீழ்க்கண்டவற்றுடன் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) திட்டமிட்ட விளம்பரத்தின் இரண்டு பிரதிகள் மின் வடிவத்தில் (electronic form). இதனுடன் சான்றொப்பமிடப்பட்ட அதன் பிரதிகள்.

(ஆ) சான்றிடல் விண்ணப்பம் கீழ்காணும் விபரங்களைத் தர வேண்டும்.

- விளம்பரம் தயாரித்ததற்கான செலவு
- தொலைக்காட்சியில் அல்லது கேபிள் தொடரமைப்பில் (cable network) அந்த விளம்பரத்தை ஒளிபரப்ப ஆகும் குத்துமதிப்பான செலவு. இது எத்தனை முறைக் காட்டப்படும் என்பதும் மற்றும் ஒரு இடையீட்டுக் காட்டுதலுக்கும் ஆகவிருக்கும் கட்டண விகிதம்.
- காட்டப்படும் விளம்பரம் வேட்பாளர்(கள்) / கட்சிகளின் தேர்தல் வாய்ப்பிற்கு பலனளிக்குமா என்பது பற்றிய வாக்குமூலமும் விண்ணப்பத்தில் இருக்க வேண்டும்.
- அந்த விளம்பரம் அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் தவிர்த்து வேறு ஒருவரால் வெளியிடப்பட்டிருந்தால் அவர் அது அரசியல் கட்சி அல்லது வேட்பாளரின் பலனுக்காக இல்லை. மேலும் குறிப்பிட்ட விளம்பரம் எந்த ஒரு அரசியல் கட்சி அல்லது வேட்பாளரால் உதவப்பட்டது இல்லை அல்லது தரப்பட்டது இல்லை என உறுதி அளிக்க வேண்டும்.
- அனைத்து பணம் செலுத்துதல் (payments) காசோலை மற்றும் வரைவோலை மூலமாக செய்யப்படும் என ஒரு அறிக்கைத் தர வேண்டும்.

(இ) கால வரையறை

- ஆனைத்து அரசியல் கட்சிகள், மற்ற சங்கங்கள், குழுமங்கள் அல்லது குழுக்கள் அல்லது ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் நிறுவனங்கள் மற்றும் ஒவ்வொரு போட்டியிடும் வேட்பாளரும் குறிப்பிட்ட விளம்பரம் ஒளிபரப்பப் படுவதற்கு மூன்று (3) நாட்களுக்கு முன்பாக கமிட்டியிடம் விண்ணப்பத்தைச் சேர்க்க வேண்டும்.
- மற்ற நபர்கள் அல்லது அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் ஒளிபரப்பப்படும் நாளுக்கு ஏழு(7) நாட்கள் முன்பாக விண்ணப்பத்தை அளிக்க வேண்டும்.
- இந்த விண்ணப்பங்கள் விண்ணப்பம் பெறப்பட்ட இரண்டு(2) நாட்களுக்குள் கவனிக்கப்பட்டு, தீர்வு செய்யப்பட வேண்டும்.

2. கூடுதல் / இணை தலைமை தேர்தல் அதிகாரி சான்றிடுதல் குழு (Addl/Jt.CEO-CC)

(அ) கூடுதல் / இணை தலைமை தேர்தல் அதிகாரி சான்றிடுதல் குழுவின் அமைப்பு: **Addl/Jt.CEO-CC** கீழ்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

| | | |
|---|---|---|
| அ. | கூடுதல் / இணை தலைமை தேர்தல் அதிகாரி | தலைவர் |
| ஆ. | நாடாளுமன்ற தேர்தல் நடத்தும் அதிகாரி | உறுப்பினர் |
| இ. | கூடுதல் / இணை தலைமை தேர்தல் அதிகாரியால் தேர்ந்தெடுக்கப்பட்ட இடைத்தரக நிபுணர் / சமூக ஊடக நிபுணர்* | உறுப்பினர் |
| ஈ. | இயக்குநர், பத்திரிக்கை மற்றும் செய்தி துறை | உறுப்பினர் |
| உ. | துணை இயக்குநர் (திட்டம்), தூர்தர்ஷன் கேந்திராஇ புதுச்சேரி. | உறுப்பினர் |
| * | *இடைத்தரக நிபுணர் / சமூக ஊடக நிபுணர் ஒரு அரசாங்க அதிகாரியாக SDM நிலைக்கு கீழ் இல்லாமல் குறைந்தபட்சம் 5 வருட காலம் அரசாங்கத்தின் தகவல் தொழில்நுட்ப துறை / cell / சமூக ஊடக cell போன்றவற்றில் வேலை செய்த அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அரசாங்கத்தில் வேலை செய்த அனுபவம் இல்லாதவராய் இருந்தால் அவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் முதுநிலை பட்டம் பெற்றவராயும் 10 வருடங்கள் அரசாங்கத்தின் தகவல் தொழில்நுட்ப துறை / cell / சமூக ஊடக cell போன்றவற்றில் வேலை செய்த அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். மேலும் சமூக ஊடக தளங்களில் நல்ல புரிதல் மற்றும் அவர்கள் எப்படி வேலை செய்கிறார்கள் மற்றும் பின்னணி மற்றும் நடுநிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் தகுதியுடையவர்களாக இருக்க வேண்டும்.* | |

(ஆ) **Addl/Jt.CEO-CC** பணிகள்: கூடுதல் / இணை தலைமை தேர்தல் அதிகாரி சான்றிடுதல் குழு DL-MCMC குழுவிலிருந்து தனித்து பின்வரும் பணிகளை மேற்கொள்ளும்.

| | | |
|---|---|---|
| விளம்பரங்களை சான்றிடுதல் | : | புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கான விளம்பர சான்றிதழ் (i) புதுச்சேரி தலைமையிடமாக கொண்ட அனைத்து பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் (ii) புதுச்சேரி யூனியன் பிரதேரசத்தில் உள்ள அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் அல்லது குழுக்கள் |
| **Addl/Jt.CEO-CC** –க்கு "கட்டணச் செய்திகள்" மீது எந்த அதிகாரமும் இல்லை. | | |

(இ) **Addl/Jt.CEO-CC**-யின் அதிகாரங்கள்: கூடுதல் / இணை தலைமை தேர்தல் அதிகாரி சான்றிடுதல் குழு

(அ) விளம்பரத்தின் எந்த ஒரு பகுதியையும் நீக்க / திருத்தி அமைக்க அதிகாரம் பெற்றவர்கள். மேலும் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சி அல்லது போட்டியிடும் வேட்பாளர் அல்லது மற்ற எந்த நபரும் இவ்வாறான தகவலைப் பெற்ற 24 மணி நேரத்திற்குள் உத்தரவிற்கு பணிய வேண்டும். இவ்வாறு மாற்றம் பெற்ற விளம்பரம் மறுபரிசீலனைக்கும், சான்றிடுதலுக்காகவும் மீண்டும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஆ) விளம்பரம் சட்டத்தின் தேவைகளுக்கு உட்பட்டிருந்தால் மற்றும் உச்சநீதி மன்றத்தின் 02-04-2004 மற்றும் 13-04-2004 நாளிட்ட ஆணையில் காணப்பெறும் உத்தரவுகளின்படி இருந்தால் இணைப்பு-ஆ-வில் குறிப்பிட்டப்படி சான்றிதழ் வழங்கும்

(இ) பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களின் பதிவினை பராமரிக்கலாம். ஒவ்வொரு விண்ணப்பத்தற்க்கும் வரிசை எண் வழங்க வேண்டும். இந்த வரிசை எண் மின்னனு வடிவத்தில் இரண்டு நகல்களில் குறிப்பிடப்பட வேண்டும். மின்னனு நகலில் உரிய அதிகாரி கையொப்பமிட வேண்டும்.இவ்வாறு அனுமதி பெற்ற விளம்பரத்தின் பிரதி ஒன்றை குழு வைத்துக்கொள்ளும்.

(ஈ) அனுமதியின் பிரதியை அனைத்து செலவினங்கள் விபரங்களுடன் இதற்காக அமைக்கப்பட்ட கணக்கு வைப்பு (Accounting) குழுவிற்கு அனுப்பி வைக்கவேண்டும்.

**(ஈ)** விளம்பரங்களை சான்றிட விண்ணப்பிக்கும் முறை:யூனியன் பிரதேசத்தில் தலைமையகம், பதிவு அலுவலகம் உள்ள அனைத்து அரசியல் கட்சிகள், மற்ற கழகங்கள் அல்லது குழுமங்கள் அல்லது குழுக்கள் அல்லது நிறுவனங்கள் மற்றும் போட்டியிடும் வேட்பாளர்கள் இணைப்பு-அ-ல் கீழ்க்கண்டவற்றுடன் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) திட்டமிட்ட விளம்பரத்தின் இரண்டு பிரதிகள் மின் வடிவத்தில் (electronic form). இதனுடன் சான்றொப்பமிடப்பட்ட அதன் பிரதிகள்.

(ஆ) சான்றிடல் விண்ணப்பம் கீழ்காணும் விபரங்களைத் தர வேண்டும்.

- விளம்பரம் தயாரித்ததற்கான செலவு
- தொலைக்காட்சியில் அல்லது கேபிள் தொடரமைப்பில் (cable network) அந்த விளம்பரத்தை ஒளிபரப்ப ஆகும் குத்துமதிப்பான செலவு. இது எத்தனை முறைக் காட்டப்படும் என்பதும் மற்றும் ஒரு இடையீட்டுக் காட்டுதலுக்கும் ஆகவிருக்கும் கட்டண விகிதம்.
- காட்டப்படும் விளம்பரம் வேட்பாளர்(கள்) / கட்சிகளின் தேர்தல் வாய்ப்பிற்கு பலனளிக்குமா என்பது பற்றிய வாக்குமூலமும் விண்ணப்பத்தில் இருக்க வேண்டும்.
- அந்த விளம்பரம் அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் தவிர்த்து வேறு ஒருவரால் வெளியிடப்பட்டிருந்தால் அவர் அது அரசியல் கட்சி அல்லது வேட்பாளரின் பலனுக்காக இல்லை. மேலும் குறிப்பிட்ட விளம்பரம் எந்த ஒரு அரசியல் கட்சி அல்லது வேட்பாளரால் உதவப்பட்டது இல்லை அல்லது தரப்பட்டது இல்லை என உறுதி அளிக்க வேண்டும்.
- அனைத்து பணம் செலுத்துதல் (payments) காசோலை மற்றும் வரைவோலை மூலமாக செய்யப்படும் என ஒரு அறிக்கைத் தர வேண்டும்.

(உ) கால வரையறை

- ஆனைத்து அரசியல் கட்சிகள், மற்ற சங்கங்கள், குழுமங்கள் அல்லது குழுக்கள் அல்லது ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் நிறுவனங்கள் மற்றும் ஒவ்வொரு போட்டியிடும் வேட்பாளரும் குறிப்பிட்ட விளம்பரம் ஒளிபரப்பப் படுவதற்கு மூன்று (3) நாட்களுக்கு முன்பாக கமிட்டியிடம் விண்ணப்பத்தைச் சேர்க்க வேண்டும்.
- மற்ற நபர்கள் அல்லது அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் ஒளிபரப்பப்படும் நாளுக்கு ஏழு(7) நாட்கள் முன்பாக விண்ணப்பத்தை அளிக்க வேண்டும்.
- இந்த விண்ணப்பங்கள் விண்ணப்பம் பெறப்பட்ட இரண்டு(2) நாட்களுக்குள் கவனிக்கப்பட்டு, தீர்வு செய்யப்பட வேண்டும்.

மாநில நிலை ஊடகங்கள் சான்றிடுதல் மற்றும் கண்காணிப்பு குழு(SL-MCMC)

(அ) SL-MCMC-யின் அமைப்பு:SL-MCMC கீழ்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்

| | | |
|---|---|---|
| அ. | தலைமை தேர்தல் அதிகாரி | தலைவர் |
| ஆ. | இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்படும் ஒரு பார்வையாளர் | உறுப்பினர் |
| இ. | குழுவால் இணைத்துகொள்ளப்படும் வல்லுநர் | உறுப்பினர் |
| ஈ. | இயக்குநர், அகில இந்திய வானொலி | உறுப்பினர் |
| உ. | தற்சார்பு குடிமகன் / பத்திரக்கையாளர் (PCI நியமனப்படி)* | உறுப்பினர் |
| ஊ. | தலைமை தேர்தல் அதிகாரியால் நியமிக்கப்பட்ட இடைத்தரக நிபுணர் / சமூக ஊடக நிபுணர் ** | |
| எ. | கூடுதல்/இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி | உறுப்பினர் செயலர் |
| * | *PCI எவரையும் பரிந்துரைக்கவில்லை என்றால், தலைமை தேர்தல் அதிகாரி விருப்பமுள்ள தற்சார்பு மூத்தக்குடிமகனையோ அல்ல நன்மதிப்புப் பெற்ற பத்திரிக்கையாளரையோ நியமிக்கலாம். இவர் தலைமை தேர்தல் அதிகாரியின் நோக்கில் அவரின் பின்புலம், நடுநிலைமைத் தன்மையில் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.* | |
| ** | இடைத்தரக நிபுணர் / சமூக ஊடக நிபுணர் ஒரு அரசாங்க அதிகாரியாக SDM நிலைக்கு கீழ் இல்லாமல் குறைந்தபட்சம் 5 வருட காலம் அரசாங்கத்தின் தகவல் தொழில்நுட்ப துறை / cell / சமூக ஊடக cell போன்றவற்றில் வேலை செய்த அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அரசாங்கத்தில் வேலை செய்த அனுபவம் இல்லாதவராய் இருந்தால் அவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் முதுநிலை பட்டம் பெற்றவராயும் 10 வருடங்கள் அரசாங்கத்தின் தகவல் தொழில்நுட்ப துறை / cell / சமூக ஊடக cell போன்றவற்றில் வேலை செய்த அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். மேலும் சமூக ஊடக தளங்களில் நல்ல புரிதல் மற்றும் அவர்கள் எப்படி வேலை செய்கிறார்கள் மற்றும் பின்னணி மற்றும் நடுநிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் தகுதியுடையவர்களாக இருக்க வேண்டும். | |

(ஆ) SL-MCMC-யின் பணிகள்:SL-MCMC-விற்கு இரண்டு குறிப்பிட்ட பணிகள் உள்ளன.

i) விளம்பரங்களைச் சான்றிடல்:ஆணையத்தின் 15-04-2004 ஆணைப்படி விளம்பரங்களைச் சான்றிடல் மீதான DL-MCMC-யின் மேல்முறையீடு மீது முடிவெடுத்தல்.

ii) அனைத்து கட்டணச் செய்திகள் விஷயங்களை – சோதித்தல்:DL-MCMC-யின் முடிவிறகு எதிரான மேல்முறையீடு மீது முடிவெடுத்தல் அல்லது சில விஷயங்களில் தன்னிச்சையாக முடிவெடுத்து அவ்விஷயங்களில் வேட்பாளர்களுக்கு கேட்பு-அறிவிக்கை (notice) அனுப்ப தேர்தல் நடத்தும் அலுவலருக்கு உத்தரவிடுதல்.

(இ) SL-MCMC-யின் அதிகாரங்கள்:

i) விளம்பரங்களை சான்றிடுதல் மீது மேல்முறையீடு:தலைமைத் தேர்தல் அதிகாரி, இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்படும் பார்வையாளர் மற்றும் குழுவால் இணைத்துக் கொள்ளப்படும் வல்லுநர் மேல்முறையீடுகளை ஆணையத்தின் 15-04-2004 நாளிட்ட ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அணுகுதல் / கையாளுதல்

ii) புகார்களை சோதித்தல் / கட்டணச் செய்திகள் பிரச்சினை மீதான மேல்முறையீடு:புகார்களை சோதித்தல் / கட்டணச் செய்திகள் பிரச்சினை தொடர்பான விஷயங்களில் DL-MCMC-யின் முடிவை SL-MCMC-யின் அனைத்து உறுப்பினர்களும் கையாளுவார்கள்.

(ஈ) கால வரையறை:SL-MCMC மேல்முறையீடு பெறப்பட்ட 96 மணி நேரத்திற்குள் அவற்றை தீர்த்து வைக்கும் மேலும் அதனுடைய முடிவை வேட்பாளருக்கு தெரிவிக்கும் மற்றும் அதன் பிரதியை மேல்முறையீடு விஷயங்களில் DL-MCMCக்கு அனுப்பும். வேட்பாளர் SL-MCMC-யின் முடிவிற்கு எதிராக ஆணை பெறப்பட்ட 48 மணி நேரத்திற்குள் தேர்தல் ஆணையத்திடம் மேல்முறையீடு செய்யலாம். இந்திய தேர்தல் ஆணையத்தின் முடிவு இறுதியானது.

இந்த உத்தரவு உடனடியாக அமலுக்கு வருகிறது

*(தலைமை தேர்தல் அதிகாரியின் ஆணைப்படி)*

27/2/19

(L. குமார்)

கூடுதல் தலைமைத் தேர்தல் அதிகாரி

பெறுநர்:

தொடர்புடைய அனைவரும்.

பிரதிகள்:

1. மாவட்ட தேர்தல் அதிகாரி, புதுச்சேரி / காரைக்கால்
2. அனைத்து உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகள், புதுச்சேரி / காரைக்கால் / மாஹி / ஏனாம்
3. நிலைய இயக்குநர்கள்,தூர்தர்ஷன் கேந்திரா / AIR,புதுச்சேரி/ காரைக்கால்.
4. இயக்குநர், செய்தி மற்றும் விளம்பரத் துறை, புதுச்சேரி.
5. ஸ்ரீ தபஸ்குமார், முது முதன்மைச் செயலர், இந்திய தேர்தல் ஆணையம் , புது தில்லி
6. ஸ்ரீ ராகுல் சர்மா, செயலர் இந்திய தேர்தல் ஆணையம், புது தில்லி.
7. அனைத்து பதிவு செய்யப்பட்ட / அங்கீகரிக்கப்பட்ட தேசிய /மாநில அரசியல் கட்சிகள்
8. அனைத்து பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள்
9. அனைத்து கேபிள் டி.வி. ஆபரேட்டர்கள் மற்றும் தொலைக்காட்சி தொடர்பமைப்புகள், புதுச்சேரி / காரைக்கால் / மாஹி / ஏனாம்

## விளம்பரச் சான்றிடலுக்கான விண்ணப்பம்I

| | | |
|---|---|---|
| (i) | விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி (முழு முகவரி) | |
| (ii) | விளம்பரம் தரப்பட்டது அரசியல் கட்சி/போட்டியிடும் வேட்பாளர்/மற்ற நபர்/குழு/சங்கம்/நிறுவனம்/அமைப்பு இவற்றாலா (பெயரை குறிப்பிடவும்) | |
| (iii) | (அ) அரசியல் கட்சியாக இருந்தால், கட்சியின் தகுதிநிலை (அங்கீகரிக்கப்பட்ட தேசிய/மாநில/அங்கீகரிக்கப்படாதக் கட்சி) | |
| | (ஆ) வேட்பாளராக இருந்தால், எங்கு போட்டியிடுகின்றாரோ அந்த பாராளுமன்ற / சட்டமன்றத் தொகுதியின் பெயர் | |
| (iv) | அரசியல் கட்சியின் தலைமையகம்/குழு/நபர்கள் சேர்ந்த குழு/சங்கம்/நிறுவனம்/அமைப்பின் முகவரி | |
| (v) | எந்தெந்த .டி.வி மற்றும் கேபிள் சேனல்களில் இந்த விளம்பரங்களை வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது? | |
| (vi) | (அ) விளம்பரம் எந்த வேட்பாளர்(கள்)-இன் தேர்தல் வாய்ப்பின் நன்மைக்காகவா? | |
| | (ஆ) அப்படியானால், அந்த வேட்பாளர்(கள்)-இன் முழு முகவரி மற்றும் தொகுதி(கள்)-இன் பெயர்(கள்) | |
| (vii) | விளம்பரம் சமர்பிக்கப்பட்ட தேதி | |
| (viii) | விளம்பரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழி(கள்) (விளம்பரம் இரண்டு மின்வடிவ (electronic form) அமைப்பில் சமர்ப்பிக்கப்படவேண்டும்) முறையாக சான்றொப்பமிட்ட | |
| (ix) | விளம்பரத்தின் தலைப்பு | |
| (x) | விளம்பரம் தயாரிப்புச் செலவு | |
| (xi) | தொலைக்காட்சி ஒளிபரப்பின் செலவு, எத்தனை இடையீடுகள் மற்றும் ஒவ்வொரு இடையீட்டிற்கான கட்டணம் | |
| (xii) | மொத்த செலவு (ருபாயில்) | |

II. திரு/திருமதி/செல்வி . . . . . . . . . . . . . . . . . . . . . . . என்பவரின் மகன்/மகள்/மனைவி(முழு முகவரி) . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ,ஆகிய நான் இந்த விளம்பரத்திற்கான தயாரிப்பு மற்றும் ஒளிபரப்பிற்கான செலுத்தப்பட்டக் கட்டணம் காசோலை/வரைவோலை மூலமாக செய்யப்படும் என உறுதிமொழி அளிக்கின்றேன்.

III. (அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் தவிர்த்து ஒரு நபர் / நபர்களுக்கு பொருந்தக் கூடியது)

திரு/திருமதி . . . . . . . . . . . . . . . . என்பவரின் மகன;/மகள்/மனைவி(முழு முகவரி) . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . , ஆகிய நான் இந்த விளம்பரம்/விளம்பரங்கள் எந்த ஒரு அரசியல் கட்சி / வேட்பாளரால் ஆணையிடப்படவில்லை .. ஆதரவளிக்கப்படவில்லை என வலியுறுத்திக் கூறுகின்றேன்.

இடம்: விண்ணப்பதாரரின் கையொப்பம்

நாள்:

## தொலைக்காட்சி ஒளிபரப்பிற்காக விளம்பரத்தை சான்றிடல்

ஐ.

| | | |
|---|---|---|
| (i) | விண்ணப்பதாரர் / அரசியல் கட்சி / வேட்பாளர் / தனி நபர் / நபர்கள் / குழு /சங்கம் /நிறுவனம்/அமைப்பு பெயர் | |
| (ii) | விளம்பரத்தின் தலைப்பு | |
| (iii) | விளம்பரத்தின் கால அளவு | |
| (iv) | விளம்பரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழி(கள்) | |
| (v) | விளம்பரம் சமர்ப்பிக்கப்பட்ட தேதி | |
| (vi) | ஒளிபரப்பு சான்றிடப்பட்ட தேதி | |

II. மேறகண்ட விளம்பரம் மதிப்பிற்குரிய இந்திய உச்ச நீதி மன்றத்தால் குறிப்பிடப்பட்ட வழிகாட்டுதல்களின்படி தொலைக்காட்சி ஒளிபரப்பிற்கு தகுதியுடையது என சான்றிடப்படுகின்றது தகுதி வாய்ந்தது என சான்றளிக்கப்படுகின்றது.

கையொப்பம்
தலைவர்/ குழு உறுப்பினர்கள்/ தகுதிசார் அலுவலர்

இடம்:

நாள்:

..\eupd\elections a1\a1doc\media and publicity\formation of committee for gepls 2016\tamil version of order.docx